# உரையாடல் - 2

**பங்குபெறுபவர்கள்** :- அப்பா, மகன்.

**அப்பா** : செல்வா இங்க வா.
**மகன்** : இதோ வருகிறேன் அப்பா.
**அப்பா** : உனக்கு எத்தனை நாட்கள் பள்ளி விடுமுறை?
**மகன்** : பத்து நாட்கள் அப்பா.
**அப்பா** : விடுமுறைக்கு எந்த ஊருக்கு செல்வோம்?
**மகன்** : கன்னியாகுமரி செல்வோம் அப்பா.
**அப்பா** : உனக்கு கன்னியாகுமரி ரொம்பப் பிடிக்குமா?
**மகன்** : எனக்கு கன்னியாகுமரி ரொம்பப் பிடிக்கும்.
**அப்பா** : கன்னியாகுமரியில் என்ன சிறப்பு என்று உனக்கு தெரியுமா?
**மகன்** : தெரியும் அப்பா. எனது ஆசிரியர் கன்னியாகுமரியின் சிறப்பு பற்றி கூறியுள்ளார்.
**அப்பா** : எங்கே சொல் பார்க்கலாம்.
**மகன்** : இந்திய பெருங்கடல், வங்காள விரிகுடா, அரபிக்கடல் போன்ற மூன்று கடல்களும் சந்திக்கும் இடம் கன்னியாகுமரி.
**அப்பா** : கன்னியாகுமரியில் எந்த கோவில் உள்ளது?
**மகன்** : குமரி அம்மன் கோவில் உள்ளது.
**அப்பா** : உனது ஆசிரியர் கன்னியாகுமரி பற்றி வேறு என்னென்ன சிறப்பு இருப்பதாகக் கூறினார்.
**மகன்** : கடலின் நடுவே விவேகானந்தர் மண்டபம், 133 அடியில் திருவள்ளுவர் சிலை, கடலின் கரையில் காந்தி மண்டபம் உள்ளது என்று கூறினார்.
**அப்பா** : இன்னும் ஒரு சிறப்பு கன்னியாகுமரிக்கு உள்ளது. அது என்ன?
**மகன்** : காலையில் கடலிலிருந்து சூரியன் தோன்றுவது, மாலையில் கடலுக்குள் சூரியன் மறைவது அப்பா.
**அப்பா** : நன்று. நாம் அனைவரும் நாளை கன்னியாகுமரிக்கு இன்பச் சுற்றுலா செல்வோம்.
**மகன்** : நன்றி அப்பா.

www.kids.noolagam.com